## DEPOSITION OF WITNESS
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | :Case No. | SC 25/2023 |
| **Deposition of witness for** | Prosecution<br>Defence<br>Court | P W 5 |

| | | |
|---|---|---|
| Name | : | சுப்ரமணி |
| Father's Name | : | தையமுத்து |
| Village | : | மருவத்தூர் |
| Taluk | : | குன்னம், பெரம்பலூர் மாவட்டம். |
| Calling | : | விவசாயம் |
| Religion | : | இந்து |
| Age | : | 49 |
| ACCUSED | | A1 – முருகேசன் ஆஜர். A2 மற்றும் A3 – ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.07.2026

**முதல் விசாரணை:–**

நான் தற்போது மேற்படி முகவரியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். போலீசார் எழுதிய பேப்பரில் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து வாங்கினார்கள். அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. என்னுடன் இரத்தினம் என்பவரும் சேர்ந்து கையெழுத்து போட்டார். பார்வை மகஜரில் உள்ள முதலாவரு கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**( அரசு தரப்பில் கேட்டுக் கொண்டதற்கிணங்க சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது. )**

<u>குறுக்கு விசாரணை:– (அரசு தரப்பில்)</u>

போலீஸ் விசாரணையில் கடந்த 27.06.2010–ஆம் தேதி காலை நானும் எங்கள் ஊரை சேர்ந்த முத்துசாமி மகன் இரத்தினம் என்பவரும் சொந்த வேலையாக எனது இருசக்கர வாகனத்தில் K. எறையூர் வழியாக சென்று கொண்டிருந்தோம் என்றும் அப்போது K. எறையூர் பிள்ளையார் கோவில் அருகே சென்றபோது காலை 11 மணியளவில் மருவத்தூர் போலீசார் அந்த இடத்தில் எனது தம்பி சின்னதம்பி என்பவர் ஓட்டி சென்ற மினி பஸ்ஸை அடித்து உடைத்த சம்பவம் தொடர்பாக சம்பவ இடத்தை பார்வையிட்டு கொண்டிருந்தார்கள் என்றும் அந்த வழியாக சென்ற என்னையும் இரத்தினத்தையும் சாட்சிகளாக இருக்க கேட்டு கொண்டு சம்பவ இடத்தில் மாதிரி வவரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றும் அவர்கள் தயார் செய்த பார்வை மகஜரில் நானும் இரத்தினமும் சாட்சி கையெழுத்து செய்தோம் என்றோம் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் கேட்டு கொண்டதன்பேரில் நான் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னார் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை:– (எதிரி தரப்பில்) இல்லை</u>

<u>மறுவிசாரணை :– இல்லை</u>

**ஒப்பம்/–கி.முரளிதரக்கண்ணன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**